




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது

# தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 04 | Issue: 063 | 4 Pages | 02.10.2026 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 063 | 4 பக்கங்கள் | 02.10.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று**

**விளக்கம்:**
**ஒருவன் அறநெறியில் நிற்காமல் அறமில்லாதவைகளைச் செய்தாலும், பிறனுக்கு உரியவளின் பெண்மையை விரும்பாமல் வாழ்தல் நல்லது**

## செயற்கை நுண்ணறிவுக்கு கடுமையான கட்டுப்பாடு கூடாது: டிரம்ப் அறிவுறுத்தல்



அமெரிக்கா, அக். 2

செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியை கட்டுப்படுத்தும் வகையில் கடுமையான புதிய விதிமுறைகளை கொண்டுவரக் கூடாது என்றும், தொழில்நுட்ப நிறுவனங்களே தங்களைகட்டுப்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அரசு சேவைகளை பொதுமக்கள் எளிதாக அணுகும் வகையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட புதிய America.govஇணையதளத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி, ஜனாதிபதி டிரம்ப் தலைமையில் வெள்ளை மாளிகையில் நடைபெற்றது. இதில் செயற்கை நுண்ணறிவு துறையைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகள், அமெரிக்க அரசின் முக்கிய அதிகாரிகள் என மொத்தம் 31 பேர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பேசிய டிரம்ப், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியை அரசு விதிமுறைகள் தடுக்கக்கூடாது. செயற்கை நுண்ணறிவை தவறாக பயன்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நீதித்துறை,மத்திய புலனாய்வு அமைப்பு உள்ளிட்ட ஏற்கனவே உள்ள அரசு அமைப்புகளே போதுமானவை. எனவே செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியை கட்டுப்படுத்தும் வகையில் கடுமையான புதிய விதிமுறைகள் கொண்டு வரப்படாது என்றார்.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பாதுகாப்பாக உருவாக்கவும் பயன்படுத்தவும் நிறுவனங்கள் உறுதிமொழி அளித்தன. இதற் கிடையே, டிரம்ப் செயற்கை நுண்ணறிவை "சூப்பர் இன்டலிஜென்ஸ்" என்று அழைக்கும் வகையில் ஒரு நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார். மனிதர்களை விட பல்வேறு பணிகளில் சிறப்பாக செயல்படக்கூடிய செயற்கைநுண்ணறிவுஅமைப்புகளைக்குறிக்கஏற்கனவே இந்த சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## அமெரிக்கா: 2 முறை விஷ ஊசி செலுத்தியும் உயிர் பிழைத்த மரண தண்டனை கைதி... குழப்பத்தில் அதிகாரிகள்




வாஷிங்டன், அக். 2

மரண தண்டனை விதிக்கப்பட்ட பெண் கைதிக்கு 2 விஷ ஊசிகள் செலுத்தியும் அவரது உயிர் பிரியவில்லை. இந்த சம்பவத்தை தொடர்ந்து, 2026ல் நிறைவேற்றப்பட இருந்த அனைத்து மரண தண்டனை உத்தரவுகளையும் நிறுத்தி வைக்க டென்னசி மாகாண கவர்னர் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தில் கடந்த 1995ம் ஆண்டு, குற்றச்செயல்களில் ஈடுபட்ட இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு பயிற்சி முகாமில் 19 வயதான கொலீன் ஸ்லெம்மர் மற்றும் 18 வயதான கிறிஸ்டா பைக் ஆகிய 2 பெண்களும் பயிற்சியாளர்களாக வேலை செய்து வந்தனர். அப்போது இருவருக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. இதையடுத்து கிறிஸ்டா பைக், தனது காதலனான 17 வயது டடாரில் ஷிப் என்பவருடன் இணைந்து, கொலீன் ஸ்லெம்மரை ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்கு அழைத்துச் சென்று அடித்துக் கொலை செய்துள்ளார். இந்த கொலை சம்பவம் அந்த சமயத்தில் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. கொலை செய்யப்பட்ட கொலீன் ஸ்லெம்மரின் மார்பில், சாத்தான் வழிபாடு தொடர்புடையகுறியீடுகள்செதுக்கப்பட்டிருந்ததாகதகவல்கள்வெளியாகின. இந்த கொலை வழக்கு தொடர்பாக கிறிஸ்டா பைக் மற்றும் அவரது காதலன் டடாரில் ஷிப் ஆகிய இருவரையும் போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், கிறிஸ்டா பைக்கிற்கு மரண தண்டனை விதித்து உத்தரவிட்டது. அதே சமயம், அவரது காதலன் டடாரில் ஷிப் 18 வயதுக்கு குறைவான மைனராக இருந்ததால், இந்த வழக்கில் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கிறிஸ்டா பைக் தரப்பில் பல்வேறு மேல் முறையீடுகள் செய்யப்பட்டன. கிறிஸ்டா பைக் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், அவரது குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட பாலியல் துன்புறுத்தல், மனநல பாதிப்புகள் போன்றவற்றை கருத்தில் கொண்டு, கிறிஸ்டாவின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று வாதிட்டனர். தற்போது 50 வயதாகும் கிறிஸ்டா, தனது இளம் பருவத்தில் நிகழ்ந்த இந்த கொலைக்காக மனம் வருந்துவதாக தெரிவித்திருந்தார். இருப்பினும் இத்தகைய காரணங்களால் கொலையை நியாயப்படுத்த முடியாது என்று தெரிவித்த நீதிபதிகள், கிறிஸ்டா பைக்கிற்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்தனர். கிறிஸ்டாவுக்கு விஷ ஊசி செலுத்தி மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என கோர்ட்டு உத்தரவிட்டது. இதன்படி, செப்டம்பர் 30ந்தேதி(நேற்று) நாஷ்வில் பகுதியில் உள்ள சிறைச்சாலையில் கிறிஸ்டாவுக்கான மரண தண்டனையை நிறைவேற்றும் பணி தொடங்கியது. அவரது உடலில் விஷ ஊசி செலுத்தப்பட்டது. சிறிது நேரத்திற்குப் பின், அவரது உடல் நிலையில் எந்த குறைபாடும் ஏற்படாததால், 2வது விஷ ஊசி செலுத்தபப்ட்டது. இரண்டு விஷ ஊசிகள் செலுத்தப்பட்ட பிறகும், கிறிஸ்டாவின் உயிர் பிரியவில்லை. அவரது இதயத் துடிப்பு நிற்கவில்லை.

இதையடுத்து கிறிஸ்டாவின் வழக்கறிஞர்கள் அவருக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டும் எனக்கோரி அவசர மனு ஒன்றை தாக்கல் செய்தனர். தொடர்ந்து கோர்ட்டு உத்தரவுப்படி, கிறிஸ்டா பைக் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கிறிஸ்டாவுக்கு விஷ ஊசி செலுத்தும்போது, ஊசி போடுவதற்கான நரம்பை கண்டுபிடிக்க மருத்துவ உதவியாளர்கள் திணறியதாகவும், 2 விஷ ஊசிகளும் தோல்வியடைந்துவிட்டால் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பான தெளிவான வழிகாட்டுதல்கள் எதுவும் வழங்கப்படவில்லை எனவும் கிறிஸ்டாவின் வழக்கறிஞர்கள் தெரிவிவித்துள்ளனர்.

இதனிடையே, விஷ ஊசி தோல்வியடைந்தது ஏன்? என அதிகாரிகள் குழப்பமடைந்துள்ளனர். இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த மரணதண்டனைநிறைவேற்றப்பட்டிருந்தால் டென்னசி மாகாணத்தில் கடந்த 200 ஆண்டுகளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட முதல் பெண்ணாக கிறிஸ்டா இருந்திருப்பார்.

இந்நிலையில், அவரது மரண தண்டனை நிறைவேற்றம் தோல்வி அடைந்ததால், 2026ம் ஆண்டில் நிறைவேற்றப்பட இருந்த அனைத்து மரண தண்டனை உத்தரவுகளையும் நிறுத்தி வைக்க டென்னசி மாகாண கவர்னர் பில் லீ உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மதுராந்தகத்தில் முதல்அமைச்சர் விஜய் இன்று ரோடு ஷோ

செங்கல்பட்டு, அக். 2

தமிழக முதல்அமைச்சரும், த.வெ.க. தலைவருமான விஜய், செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் இன்று ரோடு ஷோ நடத்த உள்ளார். அவரது ரோடு ஷோ நடைபெற இருக்கும் வழித்தடம் தொடர்பான தகவல்தற்போது வெளியாகியுள்ளது. இது தொடர்பாக த.வெ.க. பொதுச்செயலாளர், அமைச்சர் என். ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழக வெற்றிக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்அமைச்சர் விஜய், மதுராந்தகம் சட்டமன்ற தொகுதியில் இன்று மதியம் 2.30 மணி அளவில் மாமண்டூரில் தொடங்கி சாலை வழியாக தேர்தல் பரப்புரை மேற்கொண்டு, மதசார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணியின் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் மரகதம் குமரவேலுக்காக பொதுமக்களிடையே விசில் சின்னத்திற்கு வாக்கு சேகரிக்கின்றார்.

அவரது ரோடு ஷோ பின்வரும் வழித்தடத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. மாமண்டூர்புக்கத்துறை



சந்திப்புபடாளம் சந்திப்புஜானகிபுரம் சந்திப்புமேலவலம்பேட்டை சந்திப்பு,கருங்குழிசந்திப்பு,கருங்குழி பேரூராட்சிஅலுவலகம்,மதுராந்தகம் North By Pass Entrance,மதுராந்தகம் South By Pass,அய்யனார் கோவில் சந்திப்பு, மோச்சேரி,தண்டலம்,பெரும்பாக்கம்,கிளியாநகர்,செம்பூண்டி,கீழாமூர், பசுவங்கரணை,ராமாபுரம்,மோகல்வாடி,எலப்பாக்கம்,பொற்பணங்கரணை,அணைக்குன்றம்,கீழ்அத்திவாக்கம், மின்னல் சித்தாமூர்,பெரும்பேர்கண்டிகை,கடமலைப்புத்தூர்,தென்பாக்கம் சந்திப்பு,சோத்துப்பாக்கம்,மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில் சந்திப்பு,சரவம்பாக்கம்,பெருவெளி,முதுகரை,வில்லவராயநல்லூர்,மாம்பாக்கம்,மதுராந்தகம்காவல் துறை வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்திற்கு இடையூறாக யாரும் வாகங்களை நிறுத்துவதோ அல்லது வந்து செல்வதோ, கண்டிப்பாகக் கூடாது.

தமிழ்நாடு முதல்அமைச்சர், தமிழக வெற்றிக் கழகத் தலைவர், வெற்றித் தலைவரின் மதுராந்தகம் தொகுதி சாலைவலத்தின்போது, கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் சிறுமியர், பள்ளி மாணவமாணவியர்,மூத்தகுடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் உள்ளிட்டவர்களுக்கு கண்டிப்பாக அனுமதியில்லை.

இந்த சாலை வலத்தில் கலந்துகொள்ள உள்ளவர்களுக்குத் தேவையான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முதல்அமைச்சரின் சாலை வலத்தில் கலந்துகொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளவர்கள் அனைவரும், இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி, சமூக வலைத்தள நேரலைகளில் கண்டு, சாலைவலம் வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மயிலாடுதுறையில் கோஆப்டெக்ஸ் தீபாவளி விற்பனையை மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் தொடங்கி வைத்தார். ரூ.1.02 கோடி இலக்கீடு நிர்ணயம்



மயிலாடுதுறை, அக். 2

தமிழக கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் பாரம்பரியமான துணி ரகங்களை இந்தியாமுழுவதும்உள்ளகோஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக நெசவாளர்களின் வாழ்வாதாரம் உயர முக்கிய பங்காற்றி வருகின்றன. காலத்திற்கு ஏற்றவகையில்புதியஉத்திகளைகையாண்டு பல புதிய வடிவமைப்புகளில் சேலைகள் மற்றும்இதரரகங்கள்உற்பத்திசெய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை கோஆப் டெக்ஸ் விற்பனை நிலையத்தில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு விற்பனையை இன்று மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் துவங்கி வைத்தார். இதில் சிறப்பு விற்பனைக்காக புதிய வடிவமைப்புடன் கூடிய மென்பட்டு புடவைகள், சேலம் பட்டுப்புடவைகள், திருபுவனம் உள்ளிட்ட பல்வேறு ஊரில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புடவைகள், கோவை கோரா காட்டன் சேலைகள், கூறைநாடு புடவைகள், பருத்தி சேலைகள், போர்வைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உரைகள், வேட்டி, லுங்கி, துண்டு ரகங்கள், பருத்தி சட்டைகள் திரைச்சீலைகள், கால் மிதியடிகள், நைட்டீஸ், மாப்பிள்ளை செட் மற்றும் ஏற்றுமதி ரகங்கள் ஏராளமாக தருவிக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்வையிட்ட மாவட்ட இந்த ஆண்டு கடலூர் மண்டலத்திற்கு ரூ.8.88 கோடி விற்பனை குறியீடாகவும், மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள மயிலாடுதுறை விற்பனை நிலையத்திற்கு ரூ.74.50 லட்சமும் சீர்காழி விற்பனை நிலையத்திற்கு ரூ.27.50 லட்சமும் விற்பனை குறியீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாதாந்திர சிறு சேமிப்பு திட்டத்தின் படி வாடிக்கையாளர்கள் வசதிக்கேற்ப மாதந்தோறும் ரூபாய் 300 முதல் ரூ.3000 வரை11மாததவணைகள்மட்டும்செலுத்தி 12வது மாத தவணையை கோ ஆப் டெக்ஸ் நிறுவனம் ஏற்றுக் கொள்வதுடன் கூடுதல் சேமிப்புக்கு பருத்தி மற்றும் பட்டு ரக துணிகளைவாங்கிபயன்பெறலாம்என்றும் 30 சதவீதம் வசதியுடன் அனைத்து அரசு பணியாளர்களுக்கும் கடன் விற்பனை வசதியும்செய்துதரப்பட்டுள்ளதுஎன்பதால் கைத்தறிக்கு கைகொடுத்து உதவிட மாவட்ட ஆட்சியர் அழைப்பு விடுத்துள்ளார். இதில் பெண் ஒருவர் தான் எடுத்த துணியை மாவட்ட ஆட்சியர் கையால் வாங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து மாவட்ட ஆட்சியர் ஸ்ரீகாந்த் கையால் துணியை பெற்று மகிழ்ச்சியடைந்தார். மண்டல மேலாளர் மாணிக்கம்,துணைமண்டலமேலாளர்மாணிக்கம், துணைமண்டலமேலாளர்பிரேம்குமார்,விற்பனை நிலைய பொறுப்பாளர் கணேசன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## புதிய நெல் கொள்முதல் நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆட்சியர் அலுவலகத்தில் நெற்களை தரையில் கொட்டி நூதன போராட்டம்



செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியத்திற்குட்பட்ட அச்சறுப்பாக்கம் பகுதியில் ஏற்கனவே கடந்த இரண்டு வருடங்களாக நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டுவந்தது. சுற்று வட்டாரத்தில் உள்ள பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் தங்களது நெல் மூட்டைகளை இந்த நெல் கொள்முதல் நிலையத்தில் கொண்டு வந்து கொள்முதல் செய்து வந்தனர்.

தற்போது நேற்றையதினம் இரவோடு இரவாக பட்டிக்காடு கிராமத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் புதிய நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது.ஏற்கனவே செயல்பட்டு வந்த அச்சறுப்பாக்கம் கிராமத்தில் போதுமான இடவசதி இருந்தது. பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லை. தற்போது புதியதாக அமைக்கப்ப உள்ள பட்டிக்காடு கிராமத்தில் போதுமான இடவசதி கிடையாது. சாலையிலேயே நெல்களை கொட்டி உளர வைப்பதால் போக்குவரத்து பாதிப்பு மற்றும் சாலை விபத்துகள் நடைபெறும் அபாயம் உள்ளது. அதேபோல் நெற்களை தூவும்போது அந்த துகள்கள் பறந்து அருகில் உள்ள பள்ளிகளுக்கு செல்வதால் மாணவ மாணவிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் இதெல்லாம் தெரிந்திருந்தும் பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் செயல்பட்டு வந்த நெல் கொள்முதல் நிலையத்தை ஒருதலை பட்சமாக செயல்பட்டு போதுமான இடவசதி இல்லாத இடத்தில் நெல் கொள்முதல் நிலையத்தை அமைத்து இரண்டு கிராமங்களுக்கு மத்தியில் மோதலை உருவாக்கும் விதமாக மாவட்ட நிர்வாகம் செயல்படுவதாக குற்றம் சாட்டிய அச்சறுபாக்கம் கிராம விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர்

செங்கல்பட்டு ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நெற்களை தரையில் கொட்டி விவசாயிகளுக்கு எதிராக செயல்பட்டு இரவோடு இரவாக நெல் கொள்முதல் நிலையத்தை மாற்றியமைத்து பாரபட்சமாக செயல்பட்ட அரசு அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுத்து

மீண்டும் ஏற்கனவே செயல்பட்டு வந்த அதே இடத்தில் நெல் கொள்முதல் நிலையத்தை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என கோரிக்கை வைத்து நூதன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி அரசு உதவி பெறும் கல்லூரி மாணவ மாணவியர்கள் 7 கிலோமீட்டர் பேரணி

இன்றைய இளைய தலைமுறையினரைச் சீரழிக்கும் போதைப்பொருட்களின்தீமைகளுக்கு எதிராக, சென்னை வண்ணாரப்பேட்டையில் உள்ள சர் தியாகராயா கல்லூரி தேசிய மாணவர்படை (NCC) சார்பில் போதை விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. சர் தியாகராயா கல்லூரி வளாகத்தில் இருந்து தொடங்கிய இந்தப் பேரணியில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களான புதுக்கல்லூரி (The New College) மற்றும் டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி NCC பிரிவுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் இந்தப் பேரணியில் பங்கேற்றனர்




தியாகராயா கல்லூரியில் தொடங்கிய பேரணி

வள்ளலார் நெடுஞ்சாலை வழியாக ஜி ஏ ரோடு எம் சி ரோடு உள்ளிட்ட முக்கிய வீதிகள் மற்றும் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதிகள் வழியாக சுமார் 7 கிலோமீட்டர்தூரத்திற்கு நடைபெற்றது. பேரணியில் பங்கேற்ற NCC மாணவர்கள், போதைக்கு எதிரான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை (Placards) ஏந்தியும், விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பியும் பொதுமக்களிடையே போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இளைஞர்கள் மற்றும் மாணவர் சமூகம் போதைப்பாதையில் செல்வதைத் தடுத்து, போதை இல்லாத சமுதாயத்தை" உருவாக்கும் நோக்கில் சர் தியாகராயா கல்லூரி NCC பட்டாலியன் சார்பில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது

# இந்திய விமானிக்கு நன்றி; துணிச்சலான பயணிகளுக்கு பதக்கம்: இஸ்ரேல் ஜனாதிபதி அறிவிப்பு




டெல் அவிவ் அக். 2

இந்திய விமானி மச்சாருக்கு இஸ்ரேல் ஜனாதிபதி நன்றி தெரிவித்து கொண்டார்.

துபாயில் இருந்து இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை நோக்கி எப்.இசட்.1073 என்ற எண் கொண்ட பிளைதுபாய் விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. அப்போது நடுவானில் விமானிகள் இடையே கடும் சண்டை நடந்தது. ஓமன் நாட்டை சேர்ந்த துணை விமானி திடீரென எழுந்து, தலைமை விமானியாக (கேப்டன்) இருந்த இந்திய விமானி ஸ்மித் மச்சாரை கத்தியால் குத்தி கடுமையாக தாக்கினார். இதில், அவர் படுகாயமடைந்து சரிந்து விழுந்துள்ளார்.

எனினும், கத்திக்குத்து காயங்களுடன் இருந்தபோதும், துணிச்சலாக போராடிய மச்சார், விமானியின் கதவை திறந்து விட்டார். உடனே உள்ளே வந்த சக பயணிகள், பணியாளர்கள் சக விமானியை தடுத்து, கயிற்றை கொண்டு கட்டிப்போட்டனர். இதனால், விமானத்தை தகர்க்கும் சதி முறியடிக்கப்பட்டது. 174 பயணிகள் உயிர்தப்பினர்.

நிலையில், இந்திய விமானி மச்சாருக்கு இஸ்ரேல் ஜனாதிபதி ஈசாக் ஹெர்ஜாக் நன்றி தெரிவித்து கொண்டதுடன், துணிச்சலாக செயல்பட்ட பயணிகளுக்கு பதக்கம் வழங்கவும் பரிந்துரைத்துள்ளார். இதுபற்றி இஸ்ரேல் ஜனாதிபதி ஹெர்ஜாக் கூறும்போது, துணிச்சலாக செயல்பட்ட 4 பயணிகளுக்கு, ஜனாதிபதி பதக்கம் பரிந்துரைக்க விரும்புகிறேன் என்றார். படுகாயத்துடன் இருந்தபோதும், விமானி அறையின் கதவை திறந்து விட்ட மச்சாருக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன் என்றும் கூறினார்.

யினோன் ஹேயோன், ஜிவிகா மேன்ஸ், அஸ்ஸாப் ரஜுவான் மற்றும் டாக்டர் ஷோடா மொசியாஷ்விலி ஆகிய துணிச்சலாக செயல்பட்ட 4 பயணிகளிடமும் அவர் பேசினார். இந்த சம்பவத்தில் மாற்று விமானிகள், விமானி அறையில் ஏற்பட்ட சத்தம் கேட்டு எச்சரிக்கை செய்த தலி மேன்ஸ் உள்பட சிறப்பாக செயல்பட்ட அனைவருக்கும் நன்றிகள் என்று தெரிவித்து உள்ளார்.

# தவெக 150 தொகுதி வென்றாலும் கூட்டணி ஆட்சி தொடரும்: ஆதவ் அர்ஜுனா




சென்னை, அக். 2

மதுராந்தகம் தொகுதியில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலை ஆதரித்து தவெக தலைமையிலான மதசார்பற்ற சமூக நீதி வெற்றிக்கூட்டணியின் தலைவர்கள் பங்கேற்ற பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் வைகோ, திருமாவளவன், மாணிக்கம் தாகூர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்தக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா கூறியதாவது:

வன்னி அரசு அமைச்சராக கூடாதா?

திமுக கூட்டணியில் இருந்து விலகுவதற்காக நாங்கள் சோபா கொடுத்தோம் என்கிறார்கள். ஆமாம், சோபா அனுப்பினோம்..ஐயூஎம்எல் 60 ஆண்டு அமைச்சரவையில் கால் மேல் கால் போட்டு அமைச்சராக அமர்வதற்காக சோபா அனுப்பினோம். ஏன் 60 ஆண்டுகளாக உங்கள் குடும்பத்தினர் மட்டும் தான் இருக்க வேண்டுமா? ஏன் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் இருந்து வன்னி அரசு அமைச்சராக கூடாதா? அது வன்னி அரசுக்கான பதவி அல்ல.. அது ஒடுக்கப்பட்ட தலித் மக்களுக்கான பிரதிநிதித்துவம். இந்த அரசியல் எல்லாம் உதயநிதிக்கு தெரியாது. 15 எம்பிக்கள் வைத்து கொண்டு 8 அமைச்சர்களை வாங்கினீர்களே? அதே விசிகவும், ஐயூஎம்எல்லும் அமைச்சர் பதவிகள் வாங்கினால், சோபா வாங்கிவிட்டார்கள் என்று பேசுவதா?

மதுராந்தகம், தாராபுரத்தில் வாக்கு பெற யாருக்கு பணம் தர மாட்டோம். எங்கள் தலைவர் மீது நம்பிக்கை உண்டு. திமுக எப்போதும் அதிகாரத்தை பற்றி மட்டுமே யோசிக்கும். திமுக 2வது முறை வென்றதாக வரலாறே இல்லை.

சிறந்த ஆளுங்கட்சியாக திமுக இருந்ததில்லை. ஆட்சி அதிகாரத்தை பெற்று, குடும்ப ஆட்சி மட்டுமே இருக்க வேண்டும் என்ற பிம்பத்தை ஸ்டாலின் உருவாக்கினார். கூட்டணி இல்லாமல் திமுகவால் 10 தொகுதிகளில் வென்று காட்ட முடியுமா ? தவெக 150 தொகுதி வென்றாலும் கூட்டணி ஆட்சி தொடரும்" என்று பேசினார்.

# திருச்செந்தூரில் கடல் சீற்றம்: புனித நீராடிய 5 பக்தர்களின் கால் முறிந்தது

தூத்துக்குடி, அக். 2

திருச்செந்தூரில் அமாவாசை, பவுர்ணமிக்கு முந்தின, பிந்தினசில நாட்களில் கடல் உள்வாங்குவது வாடிக்கையாக நிகழ்கிறது. மேலும் கடல் அலைகளும் அவ்வப்போது சீற்றத்துடன் காணப்படுகிறது. இந்த நிலையில் திருச்செந்தூரில் இன்று அதிகாலையில் கடல் அலைகள் சீற்றத்துடன் காணப்பட்டன. சுமார் 10 அடி உயரம் வரையிலும் ராட்சத அலைகள் எழும்பி கரையை தாக்கின.

அப்போது கடலில் புனித நீராடிய சில பக்தர்கள் நிலைதடுமாறி விழுந்தனர். அங்கு கடலின் அடியில் பாறைகளாக இருந்ததால், அதில் மோதியதில் 5 பக்தர்களின் கால் எலும்பு முறிந்தது.

இதில் படுகாயமடைந்து தத்தளித்த திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தைச் சேர்ந்த குணசேகரன் (45 வயது), கடலூர் மாவட்டம் பண்ருட்டியைச் சேர்ந்த சரோஜா (42 வயது), திருச்சியைச் சேர்ந்த இலஞ்சியம் (55 வயது), புதுக்கோட்டையை சேர்ந்த ராஜகுமாரி (52 வயது), கிருஷ்ணவேணி (75 வயது) ஆகிய 5 பேரை போலீசார் விரைந்து சென்று மீட்டனர்.

படுகாயமடைந்த 5 பக்தர்களையும் சிகிச்சைக்காக திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# திருக்கோவில் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்வு




சென்னை, அக்.2

திருக்கோவில் பெண் பணியாளர்களுக்கு மகப்பேறு விடுப்பு 12 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

திருக்கோவில் பணியாளர்களின் நலன் சார்ந்த அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில், இந்து சமய நிறுவனங்களின் பணியாளர் (பணி நிபந்தனைகள்) விதிகள் 2020ல் உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், ஓய்வு பெறும் திருக்கோவில் பணியாளர்கள் அரசு ஊழியர்களுக்கு இணையாக தங்களது ஈட்டிய விடுப்பை அதிகபட்சமாக 240 நாட்கள் வரை ஒப்படைத்து, அதற்குரிய பணப்பலனைப் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

மேலும், திருக்கோவில்களில் பணிபுரியும் பெண் பணியாளர்கள் அரசு ஊழியர்களுக்கு இணையாக 12 மாத மகப்பேறு விடுப்பினைப் பெற்று பயனடைய வழிவகை செய்யப்பட்டு உள்ளது.

திருக்கோவில் பணியாளர்களின் பணிநலன், குடும்ப நலன் மற்றும் சமூகப் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில், ஈட்டிய விடுப்பு ஒப்படைப்புக்கான பணப்பலன் மற்றும் மகப்பேறு விடுப்பு ஆகிய இரு முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் திருக்கோவில் பணியாளர்கள் பெரும் பயனடைவார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திரையுலகை ஆண்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன்: தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக். 2

நடிகர் திலகத்துடன் பழகிய அழகிய தருணங்களையும், ஈடு இணையற்ற அவரது நடிப்பாற்றலையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன் என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 99 வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்பட்டது. அதையொட்டி தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

"சிம்மக் குரலாலும் செழுந்தமிழ் உச்சரிப்பாலும் கம்பீர நடையாலும் திரையுலகை ஆண்ட நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசன் அவர்களது பிறந்தநாள்!

இந்நாளில், நடிகர் திலகத்துடன் பழகிய அழகிய தருணங்களையும், ஈடு இணையற்ற அவரது நடிப்பாற்றலையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்!.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிவாஜி கணேசன் பிறந்த நாள்: தமிழக சபாநாயகர், அமைச்சர்கள் மாலை அணிவித்து மரியாதை



சென்னை, அக். 2

நடிகர்திலகம் சிவாஜிகணேசன் பிறந்தநாளை முன்னிட்டு சென்னையில் அவரது மணிமண்டபத்தில் உள்ள உருவ சிலைக்கு தமிழக சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தமிழ்நாடு அரசின் சார்பில், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த நாளை முன்னிட்டு, தமிழக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர், தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப.வெங்கடரமணன், பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் ராஜ்மோகன், சமூக நீதித்துறை அமைச்சர் வன்னிஅரசு ஆகியோர் இன்று (1.10.2026) சென்னை, அடையாறு பகுதியில் உள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள அவரது உருவ சிலைக்கு மாலை அணிவித்தும், உருவப் படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அருண் தம்புராஜ், நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள், திரைப்பட நடிகர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

1.10.1928 அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்தார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே நடிப்பதில் ஆர்வம் கொண்டு பல்வேறு நாடகங்களில் பங்கேற்று நடித்து வந்தார். பேரறிஞர் அண்ணாவால் எழுதப்பட்ட "சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்" என்கிற நாடகத்தில் சிவாஜியாக நடித்தார். அவரது நடிப்புத் திறமையினை பாராட்டி தந்தை பெரியார் "சிவாஜி கணேசன்" என்று பெயர் சூட்டினார்.

பராசக்தி திரைப்படத்தின் மூலம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அறிமுகமாகி தமிழ் திரைப்பட உலகில் 300க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், 2 இந்தி படங்கள், 9 தெலுங்கு திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாள திரைப்படத்திலும் நடித்து பிரபலமானார். சிவாஜி கணேசன் "நடிகர் திலகம்", "நடிப்புச் சக்கரவர்த்தி" என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

இவர் நடித்த கப்பலோட்டிய தமிழன், இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன் உள்ளிட்ட பல வரலாற்றுச் சிறப்புமிக்க திரைப்படங்கள் காண்போரின் மனதில் இன்றும் நிலைத்து நிற்கிறது. நடிகர்திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புத் திறமையை பாராட்டி பத்மஸ்ரீ விருது, பத்மபூஷன் விருது, செவாலியே விருது மற்றும் தாதாசாகேப் பால்கே விருது உள்ளிட்ட பல விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# 'முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான பணமோசடி புகாரில் முகாந்திரம் இல்லை' சென்னை ஐகோர்ட்டு



சென்னை, அக்.2

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியை சேர்ந்த தனவிமல் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், கடந்த சட்டமன்ற தேர்தலில் ஆலங்குடி தொகுதியில அ.தி.மு.க. சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்த தன்னை தொடர்பு கொண்ட முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், தேர்தல் செலவுகளை செய்யக்கூடிய தகுதியை நிரூபிக்க 5 கோடி ரூபாய் தரும்படி வலியுறுத்தியதாகவும், வேட்பாளர் பட்டியல் அறிவித்த பிறகு அந்த பணத்தை திருப்பி தந்து விடுவதாக உறுதி அளித்ததாகவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

அதன்படி 4 கோடி 50 லட்சம் ரூபாய் பணத்தை சி. விஜயபாஸ்கரிடம் ஒப்பந்ததாரர் மூலமாக கொடுத்ததாகவும், வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் அறிவிக்கப்பட்ட பிறகு தேர்தல் செலவுகளுக்காக அந்த பணத்தை திருப்பி கேட்டபோது 50 லட்சம் ரூபாயை மட்டும் சி.விஜயபாஸ்கர் திருப்பி கொடுத்தார் எனவும், இது தொடர்பாக காவல்துறையிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி லட்சுமி நாராயணன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, ஏற்கனவே ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் காவல்துறை தரப்பில் ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில், மனுதாரரின் புகார் குறித்து புதுக்கோட்டை டி.எஸ்.பி. விசாரணை நடத்தியதாகவும், அந்த விசாரணையில் முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கருக்கு எதிரான புகாரில் முகாந்தரம் இல்லை என்று தெரியவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காவல்துறையின் அறிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர் மீதான பணமோசடி புகாரில் முகாந்திரம் இல்லை என்று தெரிவித்து, புகார் குறித்து விசாரணைக்கு உத்தரவிடக்கோரி அ.தி.மு.க. வேட்பாளர் தாக்கல் செய்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டார்.

# மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட 5 காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது: தமிழக அரசு அறிவிப்பு



சென்னை, அக். 2

மதுவிலக்கு அமலாக்கப்பணியில் சிறப்பாக செயல்பட்ட 5 காவலர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக (i) வா.வெ.சாய்பிரணீத், இ.கா.ப., காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூர் மாவட்டம் (ii) ஜெ.ராமன், காவல் ஆய்வாளர், தனிப்பிரிவு, திருச்சி மாவட்டம், (iii) க.சண்முகம், காவல் உதவி ஆய்வாளர், விக்கிரவாண்டி காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம், (iv) திரு. எ. கருணாகரன், தலைமைக் காவலர் 1674, திருப்பாதிரிபுலியூர் காவல் நிலையம், கடலூர் மாவட்டம் மற்றும் (v) பெ.செல்வம், தலைமைக் காவலர் 381, மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு, கள்ளக்குறிச்சி மாவட்டம் (அயற்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு, விழுப்புரம் மண்டலம்) ஆகியோருக்கு 2026ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க முதல் அமைச்சர் விஜய் உத்தரவிட்டுள்ளார். இவ்விருது, முதல் அமைச்சரால் 2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள், குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/ ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்."இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 3 நாட்களில் 3 சுரங்கப்பணிகள் நிறைவு: சென்னை மெட்ரோ ஹாட்ரிக் சாதனை!




சென்னை, அக். 2

சென்னை மெட்ரோ ரெயில் இரண்டாம் கட்டத் திட்டத்தில் 3 நாட்களில் 3 சுரங்கம் தோண்டும் இயந்திரங்கள் பணிகளை நிறைவு செய்து ஹாட்ரிக் சாதனை படைத்துள்ளதாக மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ நிர்வாகம் வெளியிட்டுள்ள எக்ஸ் தளபதிவில் தெரிவித்திருப்பதாவது;

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இரண்டாம் கட்டத் திட்டத்தில் மற்றொரு முக்கிய மைல்கல்லாக, வழித்தடம் 3ல் "அடையாறு" சுரங்கம் தோண்டும் இயந்திரம் 915 மீட்டர் நீளத்தில் சுரங்கம் அமைக்கும் பணியை முடித்து ஆர்.கே.சாலை மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்து. இந்த சுரங்கம் தோண்டும் பணி கடந்த ஆண்டு டிசம்பர் 29 அன்று தொடங்கப்பட்டு 277 நாட்களில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சாதனையின் மூலம், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இரண்டாம் கட்டப் பணிகளின் கீழ் தொடர்ந்து மூன்று நாட்களில் 3 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களின் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது:

29 செப்டம்பர் 2026: வழித்தடம் 3ல் "காவேரி" சுரங்கம் தோண்டும் இயந்திரம் கீழ்ப்பாக்கம் மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. 30 செப்டம்பர் 2026: வழித்தடம் 5ல் "மருதம்" சுரங்கம் தோண்டும் இயந்திரம் வில்லிவாக்கம் பேருந்து நிலைய மெட்ரோ ரெயில் நிலையத்தைவந்தடைந்தது.1அக்டோபர்2026:வழித்தடம் 3ல் "அடையாறு" சுரங்கம் தோண்டும் இயந்திரம் ஆர். கே.சாலை மெட்ரோ ரெயில் நிலையத்தை வந்தடைந்தது.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் தி. அர்ச்சுனன், தலைமை பொது மேலாளர் ரேகா பிரகாஷ், (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), பொது மேலாளர் ஆண்டோ ஜோஸ் மெனாச்சேரி (சுரங்கப்பாதை கட்டுமானம்), பொது ஆலோசகர் நிறுவனத்தின் குழுத் தலைவர் டோனி பார்ச்செல், எல்&டி நிறுவனத்தின் திட்ட இயக்குநர் லட்சுமி பிரசாத் வெசாங்கி மற்றும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், பொது ஆலோசகர் நிறுவனம் மற்றும் ஒப்பந்தாரர்கள் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வழித்தடம் 3ல் கெல்லிஸ் முதல் தரமணி வரையிலான 12 கி.மீ நீளமுள்ள சுரங்கப்பாதை பகுதியின் கட்டுமானப் பணிகள் எல்&டி நிறுவனத்தால் 8 சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ராயப்பேட்டை மெட்ரோ ரெயில் நிலையம் முதல் ஆர். கே.சாலை மெட்ரோ ரெயில் நிலையம் வரையிலான சுரங்கப்பாதை பணிகள், "பவானி" மற்றும் "அடையாறு" ஆகிய இரண்டு சுரங்கம் தோண்டும் இயந்திரங்களைப் பயன்படுத்தி செப்டம்பர் 2024ல் தொடங்கப்பட்டன. இதில் Upline பாதையில் "பவானி" சுரங்கம் தோண்டும் இயந்திரம் 13 அக்டோபர் 2025 அன்று தனது பணியை வெற்றிகரமாக நிறைவு செய்த நிலையில், Downline பாதையில் "அடையாறு" சுரங்கம் தோண்டும் இயந்திரம் இன்று 01.10.2026 தனது பணியை நிறைவு செய்துள்ளது.

இப்பணியின் போது, "அடையாறு" சுரங்கம் தோண்டும் இயந்திரம் ராயப்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள பீட்டர்ஸ் பாலம், பணியாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகம் (EPFO Building), ஆந்திரா பள்ளி மற்றும் பல்வேறு கடைகள் உட்பட பல முக்கிய மற்றும் நெரிசலான கட்டடங்களுக்கு அடியில், சுமார் 9 முதல் 13 மீட்டர் ஆழத்தில் களிமண் கலந்த மணல் பரப்பில் பாதுகாப்பாகச் சுரங்கம் அமைக்கும் பணியை மேற்கொண்டது.

சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் முகப்பு பகுதியில் மொத்தம் 11 முறை பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நகர்ப்புற நெரிசல் மற்றும் வழித்தடத்தில் பல்வேறு கட்டடங்கள் நிறைந்த சவாலான சூழ்நிலைகள் இருந்தபோதிலும், தரைப்பகுதியில் எவ்விதப் பாதிப்போ அல்லது சுற்றியுள்ள கட்டடங்களுக்கு எந்தவொரு சேதமோ இன்றி இச்சாதனை வெற்றிகரமாக எட்டப்பட்டது.

"அடையாறு" சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் இந்த வெற்றிகரமான வருகை, TU02 ஒப்பந்தத்தின் கீழ் எட்டப்பட்ட 10வது சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் வெற்றியாகும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 5 தொகுதிகள் இடைத் தேர்தலுக்கு தடை விதிக்கப்பட்ட வழக்கில் தீர்ப்பு தள்ளிவைப்பு



சென்னை அக். 2

தேர்தல் வழக்கு நிலுவையில் உள்ள திருச்சி கிழக்கு, அம்பாசமுத்திரம், பெருந்துறை, கரூர், விராலிமலை ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்க தடை விதிக்கக் கோரி சென்னை ஐகோர்ட்டில் நெல்லையைச் சேர்ந்த வெங்கடாஜலபதி என்பவர் பொதுநல வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, தேர்தல் வழக்கில் 2வது இடம் பிடித்த வேட்பாளரை வெற்றிப் பெற்றவராக ஐகோர்ட்டு அறிவிக்கும்பட்சத்தில், இடைத்தேர்தல் ஒருவர் வெற்றி பெறும்போது, அது மிகப்பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். எனவே, இந்த 5 தொகுதிகளுக்கும் இடைத்தேர்தல் அறிவிக்கதடை விதித்து கடந்த ஜூலை 10ந்தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது.

இந்தவழக்கில் ஏற்கெனவே மனுதாரர், எதிர்மனுதாரரான விஜய் உள்ளிட்டோர் தரப்பில் வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இந்தநிலையில் இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, ஜி.அருள்முருகன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, தேர்தல் ஆணையம் தரப்பில், தேர்தல் நடத்துவது தொடர்பாக ஐகோர்ட்டு பிறப்பிக்கும் உத்தரவுகளை அமல்படுத்த தயாராக உள்ளோம். இடைத்தேர்தல் நடத்துவது குறித்து தேர்தல் ஆணையம் எந்த முடிவும் இதுவரை எடுக்கவில்லை. ஆறு மாத கால அவகாசம் உள்ளது. தேர்தல் ஆணையம் முடிவு எடுப்பதற்கு முன்பே மனுதாரர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்'' என்று தெரிவிக்கப்பட்டது.

விஜய் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் வாதிடுகையில், திருச்சி கிழக்கு உள்ளிட்ட 5 தொகுதிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு எதிரான தேர்தல் வழக்குகள் நிலுவையில் இருப்பதை சுட்டிக் காட்டி, இடைத்தேர்தலுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கவேண்டும்'' என்று வாதிடப்பட்டது. இந்த வழக்கில் அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்து உத்தரவிட்டனர்.

# ஹோட்டல் உரிமையாளருக்கு அரிவாள் வெட்டு மர்ம நபர்களுக்கு போலீசார் வலைவீச்சு



நெல்லை, அக். 3

நெல்லை மாவட்டம் மேலப்பாளையம் ஆண்டாள் தெரு பகுதியை சேர்ந்தவர் காஜா செரிப். இவர் மேலப்பாளையம் மற்றும் பாளையங்கோட்டையில் இரண்டு பகுதிகளிலும் ஹோட்டலை நடத்தி வருகிறார். இந்த நிலையில் பாளையங்கோட்டை சீவலப்பேரி சாலையில் உள்ள ஹோட்டலில் கணக்கை முடித்து விட்டு, இரு சக்கர வாகனத்தில் மேலப்பாளையத்திற்கு வந்து கொண்டிருந்தார். அப்போது அவரை பின் தொடர்ந்து வந்த 5 பேர் அவரை மறித்து கைகளில் வைத்திருந்த அரிவாளால் சரமாரியாக வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். இதில் பலத்த காயமடைந்த காஜா செரிப் சம்பவ இடத்திலேயே கீழே விழுந்தார். பின்னர் அந்த வழியே சென்ற பொதுமக்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து தகவல்அறிந்தமேலப்பாளையம்போலீசார்வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், தாக்குதலை நடத்தி விட்டு தப்பி ஓடிய மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை வேளச்சேரி குருநானக் கல்லூரியில் நடைபெற்ற நலத்திட்டங்கள் வழங்கும் விழாவில் பாலிவுட் நடிகை தியா மிர்சா கலந்து கொண்டார்.



சமூக செயற்பாட்டாளர் அப்சரா ரெட்டியின் அறக்கட்டளையின் கீழ் செயல்படும் குட் டீட் க்ளப் (Good deed club) மற்றும் குருநானக் கல்லூரி இணைந்து பத்தாயிரம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி, மற்றும் நலிவடைந்த திருநங்கைகளுக்கு தள்ளுவண்டி உணவகம்வழங்கும்நிகழ்ச்சி குருநாநக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் அமைப்பின் இந்தியாவுக்கான நல்லெண்ணத் தூதரும் பாலிவுட் நடிகையுமான தியா மிர்சா கலந்து கொண்டு

மரக்கன்றுகளை நட்டு வைத்தார். அவருடன் சமூக செயற்பாட்டாளர் அப்சரா ரெட்டி, சம்யுக்தா சிவந்தி ஆதித்தன், ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி சபீதா ஐ.ஆர். எஸ்அதிகாரிநந்தகுமார், மற்றும்பெண்தொழில்அதிபர்கள் சமூக செயற்பாட்டாளர்கள், கலந்து கொண்டனர். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 10,000 மரங்கள் நடும் திட்டத்தின் முதல் கட்டாமாக 15 மரக்கன்றுகள் கல்லூரி வளாகத்தில் நடப்பட்டது. நிகழ்வின் ஒரு பகுதியாக, திருநங்கைப் பெண்கள் தங்கள் வாழ்வாதாரத்தை உருவாக்கிக் கொள்ள உதவும் 'டிக்னிட்டி" வண்டிகள் எனப்படும்

தள்ளுவண்டி உணவகம் வழங்கப்பட்டன. பாலிவுட் நடிகை தியா மிர்சாவுடன் இணைந்து சம்யுக்தா சிவந்தி ஆதித்தன் தள்ளுவண்டி கடைகளை திறந்து வைத்து திருநங்கைகளுக்கு வழங்கினார் சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் மனிதர்களின் கண்ணியமான வாழ்வையும் இணைக்கும் முயற்சியாக இந்த நிகழ்வு அமைந்தது.அன்று மாலை நடைபெற்ற குட் டீட்ஸ் கிளப் நிகழ்வில் சுமார் 600 பெண்கள் மத்தியில் தியா மிர்சா உரையாற்றினார். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் ஒவ்வொருவருக்கும் உள்ள பொறுப்பையும், அன்றாட வாழ்க்கையில் நாம் மேற்கொள்ளக்கூடிய அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். மரக்கன்றுகள் நடும் திட்டம் மற்றும் திருநங்கைப் பெண்களுக்கான வாழ்வாதார உதவி ஆகியவற்றின் மூலம், சமூகத்தில் நீடித்த மாற்றத்தை உருவாக்குவதே அப்சரா அறக்கட்டளை மற்றும் குட் டீட்ஸ் கிளப்பின் நோக்கம் என்று அப்சரா ரெட்டி தெரிவித்தார்.

# தவெக செயலாளருடன் கள்ளத்தொடர்பு; பல பெண்களுடன் உல்லாசம்; கணவன் மனைவி மாறி மாறி புகாரால் பரபரப்பு



திருவள்ளூர், அக். 2

மனைவியை அபகரித்துவிட்டதாக திருத்தணி தவெக செயலாளர் மீது எஸ். பி. அலுவலகத்தில் கணவர் புகார் அளித்தார். நகை கேட்டு மிரட்டுவதாக பெண் பரபரப்பு குற்றம்சாட்டி உள்ளார்.

மனைவியை அபகரித்த திருத்தணி த. வெ.க.மேற்கு மாவட்ட செயலாளர் கொலை மிரட்டல் விடுப்பதாகவும் அவர் மீது நடவடிக்கை எடுக்ககோரி கணவரும், மனைவியும் மாறி, மாறி திருவள்ளூர்மாவட்ட எஸ்பி அலுவலகத்தில் புகார்அளித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருத்தணி அடுத்த தெக்கலூர் பகுதியைச் சேர்ந்தவர் பிரதாப். இவருக்கும் தீபா என்பவருக்கும் கடந்த 2018ஆம் ஆண்டு இரு வீட்டார் சம்மதத்துடன் திருப்பதியில் திருமணம் நடந்துள்ளது. இவர்களுக்கு 6 வயதில் குழந்தை உள்ளது. பிரதாபுக்கு வேறொரு பெண்ணிடம் தொடர்பு இருப்பதாலும் மனைவி தீபாவுக்கும்

வேறொருவருடன்தொடர்பு இருப்பதாக கூறியும் இருவரும் கருத்து வேறு பாட்டால் பிரிந்து வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில் தீபா கணவனை பிரிந்து குழந்தையுடன் திருத்தணியில் தன் தாய் வீட்டில் தனியாக நான்கு வருடங்களாக வசித்து வருகிறார்.

தீபா திருத்தணி பகுதியைச் சேர்ந்த திருமணமான த. வெ.க. மேற்கு மாவட்ட செயலாளர் டில்லிபாபு உடன் பல்வேறு இடங்களில் சுற்றி வருவதும் பிரதாப்புக்கு தெரிய வந்துள்ளது.

தீபா தாய் வீட்டில் தனியாக வசித்து வரும் போது டில்லி பாபு வீட்டிற்குச்சென்று வருவதும் அவருடன் இருப்பதும், அவருடன் மெரினா பீச், திருவண்ணாமலை, திருப்பதி கோவிலுக்கு சென்று வரும் போட்டோ வீடியோக்கள் கணவர் பிரதாப்புக்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்நிலையில் நேற்று மாவட்ட செயலாளர் டில்லி பாபு உடன் தீபா திருப்பதி கோவிலுக்கு சென்று இருப்பதாக கணவர் பிரதாப்புக்கு தகவல் கிடைத்துள்ளது. இதனை அடுத்து திருப்பதிக்கு சென்ற பிரதாப் மனைவியுடன்சுற்றிவரும்டில்லிபாபுவிடம் தகராறு செய்தார். இருவரும் தாக்கிக் கொண்டதாக கூறப்படுகிறது.

டில்லிபாபுவும் தீபாவும் இணைந்து கொலை செய்து விடுவதாகவும் மிரட்டுவதாகவும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தன் குழந்தையை தன்னிடம் மீட்டு தர வேண்டுமென பிரதாப் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

இதனை அறிந்த தீபா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு வந்து தன் கணவர் பிரதாப் வேறொரு பெண்ணுடன் தொடர்பில் இருந்து வந்ததால் அவரிடம் பிரிந்து நான்கு வருடங்களாக திருத்தணியில் தனது தாய் வீட்டில் வசித்து வருவதாகவும் தான் உறவினர்கள் நண்பர்கள் உடன் பேசுவதை தவறாக சித்தரித்து கணவர் பேசி வருவதாகவும் தனக்கு திருமணத்திற்கு போட்ட 60 சவரன் நகையை அவர் விற்று பல்வேறு பெண்களிடம் உல்லாசமாக இருந்து வந்ததாகவும் தவெக மாவட்ட செயலாளர் டில்லி பாபுவுக்கும் தனக்கும் எந்த கள்ளத்தொடர்பும் இல்லை என்றும் அவர் தனது குடும்ப நண்பர் என்றும் அவர் விஜய் கட்சியில் மாவட்ட செயலாளராக இருந்து வருவதால் விஜய் ரொம்ப பிடிக்கும் என்பதால் அவருடன் கட்சியில் இருந்து வருவதாக விளக்கம் தெரிவித்துள்ளார்.

கணவர் பிரதாப் 50 சவரன் நகை கொடுத்தால் அவதூறு பரப்பதை நிறுத்தி விடுவதாக கூறுவதாகவும், இல்லையென்றால் தன்னையும் குழந்தையையும் கொலை செய்து விடுவேன் என மிரட்டுவதாகவும் இதனால் தன் குழந்தைக்கும் தனக்கும் போலீசார் பாதுகாப்பு அளித்து அவர் மீது நடவ டிக்கை எடுக்கவேண்டும் என தீபா மாவட்ட காவல் கண்காணிப்பு அலுவலகத்தில் புகார் மனு அளித்துள்ளார். இந்நிலையில் தீபா மீதும் தவெக மாவட்ட செயலாளர் டில்லி பாபு மீதும் நடவடிக்கை எடுக்கும் படி கணவர் புகார் அளித்துள்ளார்.

# மதுராந்தகம் தொகுதி திமுக மீது த.வெ.க. சார்பில் வழக்கறிஞர்கள் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அவர்களை சந்தித்து புகார் மனு

மதுராந்தகம் தொகுதி திமுக மீது த.வெ.க. சார்பில் வழக்கறிஞர்கள் தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அவர்களை சந்தித்து புகார் மனு அளித்த பின் செய்தியாளர்களை சந்தித்தனர்.அப்போது பேசிய வழக்கறிஞர்கள் வேல்முருகன் மற்றும் சங்கர்,வரும் ஆறாம் தேதி நடைபெற உள்ள சட்டமன்ற இடைத் தேர்தலில் குறிப்பாக மதுராந்தகம் தொகுதியில் வெற்றி கழகம் சரித்திர வெற்றியை நோக்கி பயணப்பட்டு கொண்டுள்ளது இதை தடுக்கும் வகையில் திமுகவினர் மதுராந்தகம் தொகுதியில் பணபட்டுவாடா செய்கிறார்கள். பல்வேறு பகுதிகளில் இருந்து வந்துள்ள திமுக கட்சியைச் சார்ந்தவர்கள்சதிதிட்டத்தைதீட்டும்வகையில்செயல்பட்டு வருகிறார்கள். குழந்தைகளை இந்த தேர்தலில் ஈடுபடுத்தி தமிழக வெற்றி கழகத்திற்கு எதிராக தேர்தலில் செயல்பட்டு வருகிறார்கள்இது தொடர்பாக இன்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அவர்களிடம் இவர்களின் செயல்பாடுகள் தொடர்பாக புகார் கொடுத்துள்ளோம். மிகப்பெரிய தோல்வியை கடந்த சட்டமன்றத் தேர்தலில் பெற்ற திமுக அதே பாணியை பின்பற்றி பணத்தை வைத்து தேர்தலில் வெற்றி பெற மிகப்பெரிய அளவில் பணப்பட்டுவாடா செய்கிறார்கள். கூடுதலாக தேர்தல் பார்வையாளர்களை அதிகப்படுத்தப்பட வேண்டும். கிராமப்புற பகுதி அதிகம் இருக்கக்கூடிய பகுதியாக இருக்கக்கூடிய நிலையில் தனிப்பட்ட வீடுகளுக்கு சென்று தேர்தல் நெருங்கும் நேரத்தில் பெரிய அளவில் செயல்பட திட்டமிட்டுள்ளார்கள். பணப்புழக்கத்தையும் பணம் ஆதிக்கத்தையும் ஏற்கனவே கடந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழக வெற்றி கழகம் மிகப்பெரிய முதல்வரின் தங்களின் மூலம் உடைத்து எரிந்துள்ளோம். திமுகவினர் இன்று பண பட்டுவாடாவில் ஈடுபட்டு வருகிறார்கள்.இந்த புகாரை ஏற்றுக் கொண்ட தேர்தல் அதிகாரி பாதுகாப்பை பலப்படுத்துவதாக உறுதி அளித்திருக்கிறார்கள்.பணத்தின் ஆதிக்கத்தை வைத்து தேர்தல் வெற்றியை தீர்மானிக்கலாம் என்று திமுகவும் அதன் வேட்பாளர் பரந்தாமனும் செயல்பட்டு வருகிறார்கள் இது ஜனநாயகத்திற்கு விடப்பட்ட மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளது. மீட்டெடுக்கப்பட்ட ஜனநாயகத்தை மீண்டும் பண ஆதிக்கத்தை நோக்கி செலுத்த செயல்படும் திமுக செயல்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரிக்கையை வைத்துள்ளோம். அதை செயல்படுத்துவதாக அவரும் உறுதி அளித்திருக்கிறார்.



தமிழக வெற்றிக்கழக வழக்கறிஞர் பிரிவு மூலமாக புகார் அளித்துள்ளோம். கட்சி நிர்வாகி சங்கர் மனுதாரராக புகார் அளித்திருக்கிறார்.வீடியோ பதிவையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம் குழந்தைகளை கட்டாயப்படுத்தி தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுத்துகிறார்கள். வெளி மாவட்டத்தில் இருந்து அளவுக்கு அதிகமாக திமுகவினர் மதுராந்தகம் தொகுதியில் இறக்குமதி செய்யப்பட்டு வாக்காளர்களை மிரட்டுவது பணம் பட்டுவாடா செய்வது உள்ளிட்ட செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். தாராபுரத்தில் திமுக நிர்வாகி வீட்டில் 48 லட்ச ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது இதே போல் மதுராந்தகம் தொகுதியிலும் பல்வேறு இடங்களில் பணம் பதுக்கி வைக்கப்பட்டு தேர்தல் நேரத்தில் பட்டுவாடா செய்கிறார்கள்.தேர்தல் ஆணையம் செயல்படவில்லை என்று சொல்லவில்லை நிறைய குறைகள் உள்ளது. திமுக செய்யக்கூடிய செயல்பாடுகளை தேர்தல் ஆணையம் இதுவரை கண்டு கொள்ளாமல் உள்ளது இனிமேலாவது அதை கவனத்தில் கொள்ள வேண்டும் புகார் கொடுத்த பிறகு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருக்கிறார்கள் தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்துள்ளோம்.தலைமை தேர்தல் அதிகாரி டிஜிபி இடம் தெரிவித்து கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்திருக்கிறார்.

# 2 தொகுதி இடைத்தேர்தல்: ஓட்டுக்கு தவெக அதிக பணம் கொடுக்கிறது மார்க்சிஸ்ட் குற்றச்சாட்டு



சென்னை, அக். 2

2 தொகுதி இடைத் தேர்தலில் த.வெ.க.தான் அதிக பணம் கொடுப்ப தாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பெ.சண்முகம் தெரிவித்துள்ளார். 3 கட்சிகளும் பணப்பட்டுவாடாவை ஒரு கலாச்சார மாக வைத்துள்ளன என்று இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் வீரபாண்டியன் குறிப்பிட்டுள்ளார்.

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் அக்டோபர் 6ஆம்தேதி இடைத்தேர்தல் நடக்க உள்ளது. இந்த தேர்தலில் முனைப்போட்டி ஏற்பட்டுள்ளது. அதாவது தவெக, திமுக, அதிமுக, கம்யூனிஸ்டுகள், நாதக ஆகியவை வேட்பாளர்களைநிறுத்தி உள்ளன. இந்தகட்சிதலைவர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

வாக்காளர்களுக்கு த.வெ.க., தி.மு.க., அ. தி.மு.க.ஆகியாகட்சிகளும் பணம் கொடுத்து வருவதாக 2 கம்யூனிஸ்டு கட்சிகளும் குற்றஞ்சாட்டியுள்ளன.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்க வலியுறுத்தி இன்று இடதுசாரி கட்சிகள் ஆர்ப்பாட்டம் நடத்தின. இந்தப் போராட்டத்தில் பங்கேற்ற மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் செயலாளர்

பெ.சண்முகம் கூறியதாவது:

"மதுராந்தகத்தில் தவெகவினர்தான் ஒட்டுக்கு அதிக பணம் கொடுக்கின்றனர். நாங்கள் அங்கு பிரசாரத்துக்கு சென்றபோது நோட்டீஸ் கொடுத்து வாக்கு கேட்டோம். அப்போது 'எல்லோரும், பணம் கொடுக்கிறார்கள் நீங்கள் கொடுக்கவில்லையே..'என்றுசிலகிராமமக்கள்என்னிடம் கேட்டார்கள். எந்தெந்த கட்சி எல்லாம் பணம் கொடுத்தார்கள் என்று கேட்டபோது, தவெகவினர்தான் ஒட்டுக்கு அதிக பணம் கொடுத்ததாகச் சொன்னார்கள்.

தூயசக்தி, நாங்கள் ஓட்டுக்கு எல்லாம் பணம் கொடுக்க மாட்டோம் என்று தான் கடந்த தேர்தலிலும் முதல் அமைச்சர் விஜய் பிரசாரம் செய்தார். இப்போதும் அப்படியே பிரசாரம் செய்து வருகிறார். ஆனால் மதுராந்தகத்தில் பொதுமக்கள் கொடுத்திருக்கும் வாக்குமூலம் இது.

'தவெக அதிக பணம் கொடுத்திருக்கிறார்கள், நீங்கள் கொஞ்சமாவது கொடுங்கள்' என்று மக்கள் எங்களிடம் பேரம் பேசும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

எங்கள் கட்சியின் பலம், கொள்கைகள் குறித்து எடுத்துரைத்து நாங்கள் எந்த சூழலிலும் பணம் கொடுக்க மாட்டோம் என்று கூறினோம். இது குறித்து சம்மந்தப்பட்ட தலைவர்கள்பதிலளிக்கவேண்டும். நேர்மையாகதேர்தலை நடத்த வேண்டிய தேர்தல் ஆணையம் வாக்குரிமையை பறித்திருக்கிறது. பணப்பட் டுவாடா குறித்து தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கூறினார்.

இந்திய கம்யூனிஸ்டு செயலாளர் மு.வீரபாண்டியன் கூறியதாவது:

மதுராந்தகம், தாராபுரம் தொகுதியில் த.வெ.க., தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய 3 கட்சிகளும் பணம் கொடுக்கின்றனர். இதை 3 கட்சியினருமே ஒரு கலாச்சாரமாக வைத்துள்ளார்கள். வீட்டில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்று கணக்கெடுக்கிறார்கள்.

இந்த தேர்தலில் மற்ற கட்சிகள் யாரும் மக்களைச் சந்திக்கவில்லை. மற்ற கட்சிகளிடம் அரசியல் இல்லை. வெறுமனேதலைவர்கள்வந்துபேசிவிட்டுச்செல்கின்றனர். நாங்கள் மக்களைச் சந்திக்கிறோம்.

தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் விவகாரத்தில் முதல் அமைச்சர் விஜய் பேச வேண்டும், கண்டனம் தெரிவிக்கவேண்டும். அவர் இது பற்றிகண்டிப்பாக பேச வேண்டும். வாக்குரிமை, போராடி பெற்ற உரிமை. முதல் அமைச்சர் விஜய் இதற்கு கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக இளைஞரை திருமணம் செய்த இலங்கைப் பெண் நாடு கடத்த மதுரை ஐகோர்ட்டு கிளை தடை



மதுரை, அக்.2

இலங்கையை சேர்ந்த பவித்ரா என்ற பெண், சுற்றுலா விசாவில் இந்தியா வந்திருந்த நிலையில், தமிழ்நாட்டின் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த இளைஞரை திருமணம் செய்து கொண்டார். திருமணத்திற்குப் பின் பவித்ரா கர்ப்பமான நிலையில், விசா காலம் முடிந்த பிறகும் அவர் நாடு திரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

இதையடுத்து பவித்ராவை நாடு கடத்த அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், நாடு கடத்தும் நடவடிக்கைக்கு தடை விதித்து உத்தரவிடக்கோரி மதுரை ஐகோர்ட்டு கிளையில் பவித்ரா தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த மதுரை ஐகோர்ட்டு நீதிபதி சி.சரவணன், தற்போது பவித்ரா கர்ப்பமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு 60 நாட்களுக்கு அவரை நாடு கடத்த தடை விதித்து உத்தரவிட்டார். மேலும், 60 நாட்களுக்குள் தகுந்த சட்டங்களின் கீழ் முறைப்படி திருமணத்தைப் பதிவு செய்து கொள்ள அறிவுறுத்திய நீதிபதி, பவித்ராவுக்கு தேவையான மருத்துவ உதவிகளை வழங்குமாறு உத்தரவிட்டு வழக்கை முடித்து வைத்தார்.

# நெல்லையில் சிறுமிக்கு பாலியல் தாக்குதல்: குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறை



நெல்லை, அக். 2

நெல்லை மாநகரில் ஒரு சிறுமியை பாலியல் தாக்குதல் செய்த குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகரத்தில் கடந்த 2024ம் ஆண்டு இஸ்ரவேல் செல்வசேகர் என்பவர் ஒரு சிறுமியிடம், பாலியல் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார். இது குறித்து சிறுமி அளித்த புகாரின் பேரில், போக்சோ சட்டத்தின் கீழ் 20.1.2024 அன்று வழக்குப்பதிவு செய்யப்பட்டு, அப்போதைய பாளை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஜெயலெட்சுமி தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு, இஸ்ரவேல் செல்வசேகரை கைது செய்தார்.

புலன் விசாரணையின் முடிவில் நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்து, வழக்கின் விசாரணையானது, திருநெல்வேலி மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த நிலையில் மேற்சொன்ன நபருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, நீதிபதி சுரேஷ்குமார் நேற்று (30.9.2026) குற்றவாளிக்கு தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

நீதிபதி சுரேஷ்குமார் குற்றவாளிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.5 ஆயிரம் அபராதம் விதித்தும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.1 லட்சம் நிவாரணத்தொகை வழங்க உத்தரவிட்டும் தீர்ப்பளித்தார்.

திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் தேஷ்முக் சேகர் சஞ்சய், இந்த வழக்கின் நீதிமன்றவிசாரணைநடைபெற, சிறப்பாக கண்காணிப்பு செய்த போலீஸ் துணை கமிஷனர் (கிழக்கு) சரவணன், உதவி கமிஷனர் சிவசக்தி (பாளையங்கோட்டை சரகம்), பாளை அனைத்து மகளிர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் நாககுமாரி, வழக்கினை திறம்பட புலன் விசாரணை செய்த அப்போதைய காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஜெயலெட்சுமி, வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த நீதிமன்ற காவலர் ரேணுகா, குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர திறம்பட வாதிட்ட அரசு வழக்கறிஞர் உஷா ஆகியோரை பாராட்டினார்.

# கடைக்கு வந்த வாடிக்கையாளர்களிடம் திமிராக பேசி சூடான டீயை ஊற்றிய கொடூரம்




கள்ளக்குறிச்சி, அக். 2

கடைக்கு வந்த வாடிக்கையாளரிடம் திமிராக பேசி அவர்கள் மீது சூடான டீயை கடைக்காரர் ஊற்றிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் அருகே வடதுரைசலூர் கிராமத்தை சேர்ந்தவர் பிரகாஷ். இவர் வடதுரைசலூர் கேட் பகுதியில் டீக்கடையுடன் சேர்த்து ஒரு பேக்கரியும் நடத்தி வருகிறார். இந்த நிலையில் அதே ஊரில் திருக்கோவில் பகுதியை சேர்ந்த சதிஷ் என்பவர் தனது நண்பர்களோடு பேக்கரிக்குவந்துள்ளார்.அப்போதுஅங்கிருந்தபிரகாஷிடம் டீயை போட்டுத் தருமாறு கேட்டுள்ளார். அதற்கு பிரகாஷ் பணத்தை கொடுத்துவிட்டு டீயை வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்.

இதைக்கேட்ட சதிஷ் நாங்களும் இந்த பகுதியை சேர்ந்தவர்கள்தான். டீயைக்குடித்துவிட்டு காசுதருகிறோம் எ ன க் கூ றி யு ள் ள ா ர் . இதையடுத்து சதிஷ் ஒரு தண்ணீர் பாட்டிலை கேட்டுள்ளார். அவர்களை கோவப்படுத்தும் விதமாக தண்ணீர் பாட்டிலை அதிக விலைக்கு விற்பனை செய்துள்ளார். எதற்கு எங்களி டம் பிரச்சினை செய்கிறீர்கள் என இளைஞர்கள் கேட்டு ள்ளனர். பின்னர், இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றிய நிலையில் கைகலப்பாக மாறியது. இதில் ஆத்திரமடைந்த கடைக்காரர் சூடான டீயை சதிஷின் நண்பர் மீது ஊற்றியுள்ளார்.இருவரும்சரமாரியாகதாக்கிக்கொண்டனர். இதையடுத்து அங்கிருந்த பொதுமக்கள் இணைந்து இருதரப்பினரையும் அங்கிருந்து அகற்றினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கிணறு தோண்டியபோது திடீரென சரிந்த மண்... 2 இளைஞர்கள் உயிரிழப்பு



திருவண்ணாமலை, அக். 2

கிணறு தோண்டிய போது மண் சரிந்து விழுந்ததில் 2 இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

திருவண்ணாமலை மாவட்டம் கஸ்தம்பாடி அருகே போளூர் கிராமத்தில் செல்வமணி, ரவிச்சந்திரன் இருவர் உட்பட 3 இளைஞர்கள் இன்ற கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது கிணற்றின் ஓரத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த மண் திடீரென சரிந்து கிணற்றுக்குள் விழுந்தது. நேற்று பெய்த கனமழையால் ஈரப்பதத்துடன் இருந்த மண் குவியல் திடீரென சரிந்ததால், பணியில் இருந்த 3 பேரும் மண்ணில் சிக்கிக்கொண்டனர். இதில் செல்வமணி, ரவிச்சந்திரன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும், ஒருவரை அப்பகுதி பொதுமக்கள் மீட்டு சிகிச்சைக்காக ஆரணி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

02.10.2026

# சென்னை மாநகராட்சிக்கு குவிந்த வருவாய்: அரையாண்டில் ரூ.1,124 கோடி சொத்துவரி வசூல்!



சென்னை, அக். 2

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2026 27நடப்புநிதிஆண்டின் முதல் அரையாண்டில் சொத்துவரி ரூ.1,124.69கோடியும், தொழில்வரிரூ.312.06 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைக் காட்டிலும் வரிவசூல் விகிதம் முறையே 12.95 சதவீதம் மற்றும் 6.89 சதவீதம்அதிகமாகவசூலிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;

பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதான வருவாய் இனங்களில் சொத்துவரி மற்றும் தொழில்வரி உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 202627 நடப்பு நிதி ஆண்டின் முதல் அரையாண்டில் (1/202627) சொத்துவரியாக ரூ.1,124.69 கோடியும், தொழில் வரியாக ரூ.312.06 கோடியும் வசூலிக்கப்பட்டுள்ளது. சொத்துவரியினை 9.20 லட்சம் சொத்து உரிமையாளர்களும், தொழில்வரியினை 45 ஆயிரம் வணிகர் மற்றும் தனிநபர்களும் முழுமையாக செலுத்தியுள்ளனர்.

மேற்படி முதலாம் அரையாண்டில் வசூலிக்கப்பட்ட சொத்துவரி மற்றும் தொழில்வரி தொகையானது கடந்த ஆண்டின் வரிவசூலினை காட்டிலும் வளர்ச்சி விகிதம் முறையே 12.95 சதவீதம் மற்றும் 6.89 சதவீதம் அதிகமாக வசூலிக்கப்பட்டுள்ளது. இது மாநகராட்சியின் சாதனையாக கருதப்படுகிறது.

முதலாம் அரையாண்டின் இறுதி நாளான 30.09.2026 அன்று மட்டுமே சொத்து வரி வசூல் ரூ.50.26 கோடி மற்றும் தொழில்வரி வசூல் ரூ.45.94 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வளர்ச்சியானது முறையான அலுவலர்களின் கண்காணிப்பு, களஆய்வில் நுண்ணிய மதிப்பாய்வு மற்றும் அலுவலர்களுக்கு உரிய திட்டங்கள் வகுத்து பகிர்ந்தளித்ததன் மூலமாகவும், கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தீவிர வசூல் மூலமாகவும், நிர்ணயிக்கப்பட்ட இலக்கானது, பெருநகர சென்னை மாநகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது.

சொத்துவரி மற்றும் தொழில் வரியினை உரிய காலத்தில் செலுத்தி, பெருநகர சென்னை மாநகராட்சி கட்டமைப்பு பணிகளுக்கு உதவிய பொதுமக்களுக்கு பெருநகரசென்னைமாநகராட்சியின்சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பனியன் தொழிற்சாலையில் பாய்லர் வெடித்து விபத்து.. 9 பெண் தொழிலாளர்கள் மயக்கம்




திருப்பூர், அக். 2

பனியன் தொழிற்சாலையில் பாய்லர் வெடித்த சத்தத்தில் 9 பெண் தொழிலாளர்கள் மயக்கமடைந்தனர்.

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள அருள்புரத்தில் தனியார் பனியன் நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலையில் இன்று வழக்கம் போல் வேலை செய்து வந்துள்ளனர். மதிய உணவு வேளையில் அனைவரும் உணவு சாப்பிட சென்றுள்ளனர்.அப்போதுநிறுவனத்தினுள் இருந்த அயர்னிங் பாய்லர் திடீரென பலத்த சத்தத்துடன் வெடித்தது. இதில் 9 பெண் தொழிலாளர்கள் அதிர்ச்சியில் மயக்கம் அடைந்தனர்.

இதனையடுத்து அங்கு வேலை செய்யும் சக பணியாளர்கள், மயக்கமடைந்த 9 பேரையும் மீட்டு பல்லடத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து தகவல் அறிந்த பல்லடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# மணல் கடத்தலை தடுக்க முயன்ற சப் இன்ஸ்பெக்டருக்கு நேர்ந்த சோகம்



தஞ்சாவூர், க. 2

மணல் கடத்தலை தடுக்க முயன்ற சப் இன்ஸ்பெக்டர் மீது டிராக்டர் மோதியதால் அவர் பலத்த காயமடைந்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா மெலட்டூர் கோடுகிழி கிராமத்தில் சட்டவிரோதமாக மணல் கடத்துவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இது குறித்து தகவலின் பேரில் மெலட்டூர் காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் முத்துவேல் மற்றும் தலைமை காவலர் ராமர் இருவரும் இரு சக்கர வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். கோடுகிழி கிராமத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டிருந்த போது எதிரே ஒரு டிராக்டர் வந்துள்ளது. சந்தேகத்தின் பேரில் அதை தடுத்து நிறுத்த முயற்சி செய்தனர்.

அப்போது அச்சத்தில் இருந்த டிராக்டர் ஓட்டுநர் நிறுத்தாமல் வண்டியில் இருந்து குதித்து தப்பி சென்று விட்டார். ஆனால் டிராக்டர் நிற்காமல் முன்னோக்கி சென்று, சப் இன்ஸ்பெக்டர் முத்துவேல் மீது மோதியது. டிராக்டர் மோதியதில் சப் இன்ஸ்பெக்டரின் தலை மற்றும் கால்களில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதனால் அந்த இடத்தில் கீழே விழுந்து வேதனையில் துடித்தார். இதனை பார்த்த தலைமைக் காவலர் ராமர், மெலட்டூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தார். உடனடியாக அங்கிருந்து வந்த சப்இன்ஸ்பெக்டர் போதுமணி மற்றும் காவலர்கள் முத்துவேலை மீட்டு சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.



தேனி மாவட்டம் வீரபாண்டியில் நியாய விலைக்கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் இருப்பு நிலை குறித்து கலெக்டர் இரா.வைத்திநாதன் ஆய்வு மேற்கொண்டார்.

# இன்றைய ராசி பலன்கள் (02.10.2026)

**மேஷம்:** குடும்பத்தில் நல்ல சூழல். வேலையில் தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால்நிலுவைப்பணிகள் நகரும். அவசரமாக பதிலளிப்பதைத் தவிர்க்கவும்.

**ரிஷபம்:** உங்கள் கருத்துக்கு மதிப்பு கிடைக்கும். புதிய பொறுப்புகள் வரலாம். பண விஷயங்களில் நிலைத்தன்மை காணப்படும்.

**மிதுனம்:** வேலை தொடர்பான பேச்சுத் திறனால் நல்ல அங்கீகாரம் கிடைக்கலாம். புதிய தகவல் உங்கள் முடிவை மாற்றக்கூடும்.

**கடகம்:** குடும்பத்தில் அமைதி. வேலை மெதுவாக இருந்தாலும் சீராக முன்னேறும். தூக்கம் மற்றும் ஓய்வில் கவனம் செலுத்துங்கள்.

**சிம்மம்:** குடும்ப முடிவுகளில் உங்கள் ஆலோசனை முக்கியமாக இருக்கும். குழுவை வழிநடத்தும் வாய்ப்பு கிடைக்கலாம்; அகந்தையைத் தவிர்க்கவும்.

**கன்னி:** பணிகள் அதிகமாக இருக்கும். முன்னுரிமை வைத்து செயல்பட்டால் திட்டங்களை நேரத்தில் முடிக்கலாம்.

**துலாம்:** குடும்பத்தினருடனும் குழந்தைகளுடனும் நேரம் செலவிடுவது மனநிம்மதி தரும். கூட்டுத் தொழில்/புதிய ஒப்பந்தங்களில் முழுமையாக ஆராய்ந்து முடிவெடுக்கவும்.

**விருச்சிகம்:** பழைய எண்ணங்களை மாற்றி புதிய அணுகுமுறையை ஏற்கும் நாள். தொழில் தொடக்கம் அல்லது மாற்றத்துக்கு சாதகமான சூழல் இருக்கலாம்.

**தனுசு:** வியாபாரப் பயணம் அல்லது வெளிநாட்டுதொடர்பானவேலைகள் வரலாம். கூட்டுத் தொழிலில் வெளிப்படைத்தன்மை அவசியம்.

**மகரம்:** குடும்ப ஆதரவு கிடைக்கும். உங்கள் உழைப்பு பெரியவர்களின் கவனத்திற்கு வரலாம். உடல் சோர்வுக்கு ஓய்வு கொடுங்கள்.

**கும்பம்:** நண்பர்கள்/உறவினர்களுடன் தொடர்பு அதிகரிக்கும். புதிய தகவல் அல்லது வாய்ப்பு தொடர்புகள் மூலம் வரலாம். தேவையற்ற ஆன்லைன் செலவுகளைத் தவிர்க்கவும்.

**மீனம்:** வேலையில் நேர்மையும் முயற்சியும் நல்ல பலனைத் தரலாம். வருமானத்துக்குப் புதிய வாய்ப்புகள் தோன்றலாம்; குடும்ப சூழல் அமைதியாக இருக்கும்.

# மாயமான மூதாட்டி உடல் கருகிய நிலையில் சடலமாக மீட்பு



தென்காசி, அக். 2

ஆலங்குளம் அருகே காணாமல் போன மூதாட்டியின் உடல் கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் அருகே உள்ள சிவலார்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர் சண்முகத்தாய் (வயது 80). இவர் சில தினங்களுக்கு முன்பு காணாமல் போனதாக அவரது மகன் முத்தையா என்பவர் ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மூதாட்டியை தேடி வந்தனர்.

இந்த நிலையில் ஆலங்குளத்தில் இருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மேலகலங்கல் காட்டுப் பகுதியில் கருகியநிலையில்உடல்ஒன்றுகிடப்பதாக அப்பகுதி வழியாக சென்ற சிலர் பார்த்து ஊத்துமலை காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தனர். இது குறித்து தகவல் அறிந்த ஊத்துமலைபோலீசார், சம்பவஇடத்திற்கு நேரில் சென்று கருகிய நிலையில் கிடந்த சடலத்தைமீட்டுபிரேதபரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டதில், காணவில்லை என ஆலங்குளம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டிருந்த சிவலார்குளம் கிராமத்தைச் சேர்ந்த மூதாட்டி சண்முகத்தாய் என்பது தெரியவந்தது. மூதாட்டிதற்கொலைசெய்துகொண்டாரா? அல்லது யாரேனும் கடத்தி சென்று கொலை செய்து எரித்தனரா? என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 2027 உலகக்கோப்பை கிரிக்கெட்; கால அட்டவணை அறிவிப்பு: இந்தியாபாகிஸ்தான் போட்டி எப்போது?



2027ம் ஆண்டு நடைபெற உள்ள ஐ.சி.சி. ஒருநாள் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் இன்று வெளியிட்டது. தென் ஆப்பிரிக்கா, ஜிம்பாப்வே, நமீபியா ஆகிய 3 நாடுகள் இணைந்து நடத்தும் இந்த உலகக்கோப்பையில் 14 அணிகள் பங்கேற்கின்றன. மொத்தம் 57 போட்டிகள் 12 மைதானங்களில் நடைபெறும். புதிய முறையில் நடைபெறும் இந்த உலகக்கோப்பையின் தொடக்க கட்டமாக நமீபியாவின் வின்ட்ஹோக் நகரில் அக்டோபர் 2ந் தேதி 3அணிகள்பங்கேற்கும் 'சூப்பர்சீரிஸ்' போட்டிகள்தொடங்குகின்றன. அதன்பிறகு 12 அணிகள் தலா 6 அணிகள் கொண்ட 2 குழுக்களாக பிரிக்கப்படும்.

'ஏ' பிரிவில் இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஜிம்பாப்வே மற்றும் ஒரு தகுதிச்சுற்று அணி இடம்பெற்றுள்ளன. 'பி' பிரிவில் நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா, இலங்கை, இங்கிலாந்து, வங்காளதேசம் மற்றும் மற்றொரு தகுதிச்சுற்று அணி இடம்பெற்றுள்ளன.இதில் ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்தியாபாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி அக்டோபர் 10ந் தேதி ஜோகன்னஸ்பர்க் நகரில் நடைபெறுகிறது.

இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் அக்டோபர் 7ந் தேதி கேப்டவுனில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.உலகக்கோப்பை தொடரின் இறுதிப்போட்டி நவம்பர் 21ந் தேதி நடைபெறுகிறது. குரூப் சுற்று போட்டிகளுக்கு பிறகு சிறப்பாக செயல்படும் அணிகள் 'சூப்பர் 7' சுற்றுக்கு முன்னேறும். அதன் பின்னர் அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிகள் நடைபெறும். 2027 உலகக்கோப்பை போட்டிகள் அக்டோபர் 2ந் தேதி தொடங்கி நவம்பர் 21ந் தேதி வரை நடைபெற உள்ளன.

# ஆசிய விளையாட்டு: இலங்கையை வீழ்த்தி இந்தியா இறுதிப்போட்டிக்கு முன்னேற்றம்




ஆசிய விளையாட்டு கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் இன்று நடைபெற்ற அரைஇறுதியில் ஸ்ரேயாஸ் அய்யர் தலைமையிலான இந்திய அணி, இலங்கையை எதிர்கொண்டது.

இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது.அதில் டாஸ் வென்ற இலங்கை அணியின் கேப்டன் சஹான் அரச்சிகே பந்துவீச்சை தேர்வு செய்தார். அதன்படி இந்திய அணி முதலில் பேட்டிங் செய்தது.

தொடக்கத்தில் அபிஷேக் சர்மா , சஞ்சு சாம்சன் தலா 7 ரன்களில் ஆட்டமிழந்தனர். மறுபுறம் வைபவ் சூர்யவன்ஷி சிறப்பாக விளையாடினார். பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்ட அவர் 37 ரன்களில் வெளியேறினார்.

தொடர்ந்து இஷான் இலங்கை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தார். நிலைத்து விளையாடிய அவர் அரைசதம் அடித்து 79 ரன்களில் ஆட்டமிழந்தார். இதனால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 169 ரன்கள் எடுத்தது.

தொடர்ந்து விளையாடிய இலங்கை பேட்ஸ்மேன்கள், இந்திய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியமால் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இலங்கை அணியில் 5 வீரர்கள் டக் அவுட் ஆகினர்.

இதனால் இலங்கை அணி 9.5 ஓவர்களில் 45 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. இந்திய அணியில் பும்ரா , அக்சர் படேல் , அபிஷேக் சர்மா தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.இதனால் 124 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.ஆசிய விளையாட்டு இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

# வெற்றிக்கு தகுதியானவர் ஜேசன் சஞ்சய் நடிகை ஜோதிகா




நடிகை ஜோதிகா இயக்குநர் ஜேசன் சஞ்சய்யை வாழ்த்தி தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் பதிவிட்டுள்ளார்.

தமிழக முதல்அமைச்சர் விஜய்யின் மகன் ஜேசன் சஞ்சய் முதல்முறையாக இயக்குநராக 'சிக்மா' படத்தின் மூலம் அறிமுகமாகியுள்ளார். இப்படத்தை லைகா மற்றும் ஜேஎஸ்ஜே மீடியா நிறுவனம் இணைந்து தயாரித்துள்ளது.

இந்தப் படத்தில் சந்தீப் கிஷன் நாயகனாகவும் பரியா அப்துல்லா நாயகியாகவும் நடித்துள்ளனர். இந்தப் படத்துக்கு இசையமைப்பாளர் தமன் இசையமைத்துள்ளார். இப்படத்தில் ராஜூ சுந்தரம், அன்புதாசன், யோக் ஜாபி, சம்பத் ராஜ், கிரண் கொண்டா, மகாலட்சுமி சுதர்சனன், ஷீலா ராஜ்குமார், கமலேஷ், கிரண் கொண்டா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். கேத்ரின் தெரசா ஒரு துள்ளலான பாடலில் சிறப்புத் தோற்றத்தில் தோன்றுகிறார். இந்த படம் வருகிற 2ந் தேதி (நாளை) தியேட்டர்களில் வெளியாக உள்ளது.

இந்த படத்தின் புரமோஷனுக்காக படக்குழுவினர் பல்வேறு இடங்களுக்கு சென்று வருகின்றனர். சமீபத்தில் கூட ஐதராபாத்தில் புரமோஷன் நிகழ்ச்சியை நடத்தினர். அதில் நடிகர் சிரஞ்சீவி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு படக்குழுவினரை வாழ்த்தினார்.

தமன் இசையமைப்பில் ஆக்சன் திரில்லர் திரைப்படமாக 'சிக்மா' நாளை திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இந்த நிலையில், நடிகை ஜோதிகா ஜேசன் சஞ்சய்யை வாழ்த்தி பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அதில், "சிக்மா படக்குழுவினருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள். ஜேசன் சஞ்சய்யின் நேர்காணலைப் பார்க்கும் போது பக்குவமான, அமைதியான மற்றும் இயல்பான இளைஞராக மகிழ்ச்சியைத் தருகிறார். நீங்கள் வளர்ந்திருப்பதைப்பார்க்கும்போது, உங்களுக்குகிடைக்கவுள்ளவெற்றிக்குத்தகுதியானவர்எனதெரிகிறது. உங்கள் பெற்றோருக்கு சிறந்த மகனாக இருக்கும் உங்களையும், படக்குழுவினரையும் வாழ்த்துகிறேன். உங்களின் 'சிக்மா' திரைப்படத்தின் வெளியீடு சிறப்பாக அமையட்டும். கடவுள் எப்போதும் உங்களை ஆசீர்வதிக்கட்டும்." என தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில் தெரிவித்துள்ளார்.

# தேசிய விருது பெறும் நடிப்பு விஜய் சேதுபதியின் 'பத்தா' படத்தை பாராட்டிய இயக்குநர் ஷங்கர்

விஜய் சேதுபதியின் 'பத்தா' படத்தை இயக்குநர் ஷங்கர் பாராட்டியுள்ளார். படத்தில் நடித்த சிறுவன் தேசிய விருது தேசிய விருதுப் பெற தகுதியானவன் எனவும் தெரிவித்துள்ளார்.

'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்', 'சீதக்காதி' ஆகிய படங்களைத் தொடர்ந்து விஜய் சேதுபதி இயக்குநர்பாலாஜிதரணிதரன்கூட்டணியில் உருவாகி வரும் மூன்றாவது திரைப்படம் 'பத்தா'. இப்படத்தில் விஜய் சேதுபதிக்கு ஜோடியாக லிஜோமோல் ஜோஸ் நடித்துள்ளார். குழந்தை நட்சத்திரம் சாய் பிரிதிவ் ராஜ் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசையமைத்துள்ளார்.

இப்படத்தை இயக்குநர் அட்லீயின் 'ஏ பார் ஆப்பிள் ஸ்டுடியோஸ்' நிறுவனமும், 'ஸ்டார் ஸ்டுடியோஸ் 18 சினி1 ஸ்டுடியோஸ்' நிறுவனங்களும் இணைந்து தயாரித்துள்ளன. விஜய் சேதுபதி பாலாஜி தரணிதரன் கூட்டணி, அட்லீயின் தயாரிப்பு நிறுவனம் மற்றும் சாய் அபயங்கரின் இசை என பல்வேறு காரணங்களால் இப்படத்தின் மீதான எதிர்பார்ப்பு ஏற்கனவே அதிகரித்துள்ளது.

விஜய் சேதுபதியின் 'பத்தா' படம் இன்று திரையரங்குகளில் வெளியானது.

விஜய் சேதுபதியின் 'பத்தா' படத்தை இயக்குநர் ஷங்கர் பாராட்டியுள்ளார். படத்தில் நடித்த சிறுவனுக்கு தேசிய விருது வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ளப் பதிவில், "பத்தா ஒரு நல்ல கதை, மனிதநேயம், சிறந்த நகைச்சுவை மற்றும் படம் முழுவதும் கைதட்டல் பெறத் தகுதியான தருணங்களைக் கொண்ட ஒரு அழகான திரைப்படம். மிகச் சிறந்த நடிகர்தேர்வு மற்றும் நடிப்பு; அதோடு, ஒவ்வொரு முகத்தின் 'க்ளோஸ்அப்' காட்சிகளும் மிக அருமையாக உள்ளன. மிகச்சிறந்த மற்றும் உணர்வுப்பூர்வமான நடிப்பு விஜய் சேதுபதியால் வழங்கப்பட்டுள்ளது. சிறுவன் சாய் பிரித்விராஜ் தேசிய விருதுப் பெற தகுதியானவன்.

லிஜோமோல் ஜோஸ் மிகவும் இயல்பாகவும், நேர்த்தியாகவும் நடித்துள்ளார். சாய் அபயங்கரின் பின்னணி இசைபுதுமையாகவும் வழக்கத்திற்கு மாறானதாகவும் உள்ளது; இது சில காட்சிகளை வேறொரு உயரத்திற்கு கொண்டு செல்கிறது. அப்பாவித்தனமும் உணர்ச்சிகளும் நிறைந்த பல நெகிழ்ச்சியான தருணங்கள் படத்தில் உள்ளன. இத்தகைய தரமான மற்றும் மிகப்பெரிய வெற்றிப் படத்தை தயாரித்ததற்காக தயாரிப்பாளர்களுக்கு வாழ்த்துக்கள். இயக்குநர் பாலாஜி தரணீதரனிடமிருந்து மற்றொரு மறக்க முடியாத திரைப்படம்" என குறிப்பிட்டுள்ளார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.